திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலப் பள்ளிகள், கள்ளர் சீரமைப்புப் பள்ளிகள், வனத் துறைப் பள்ளிகள் ஆகிய பள்ளிகளில் 1 முதல் 12 ஆம் வகுப்பு வரை பயின்று நீட் தேர்வில் தேர்ச்சி பெற்ற மாணாக்கர்களுக்கு பிரத்யேகமாக ஓர் உள் ஒதுக்கீடு கொடுக்க வகை செய்யும் சிறப்புச் சட்டம் ஒன்றை இயற்ற மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு பரிசீலித்து வருகிறது.

இச்சட்டத்தை இயற்றுவதற்கு வகை செய்ய ஏதுவாக, தேவைப்படும் அனைத்துப் புள்ளி விவரங்களையும் தொகுத்து, உரிய பரிந்துரையையும் தமிழ்நாடு அரசுக்கு வழங்க, ஓய்வு பெற்ற உயர் நீதிமன்ற நீதிபதி ஒருவரின் தலைமையில் ஓர் ஆணையம் அமைக்கப்படும். அந்த ஆணையத்தில் பள்ளிக் கல்வி, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை, சட்டம் ஆகிய துறைகளின் அரசுச் செயலாளர்களும், பள்ளிக் கல்வித் துறையினால் நியமிக்கப்படும் 2 கல்வியாளர்களும் உறுப்பினர்களாக இருப்பார்கள். மருத்துவக் கல்வி இயக்குநர் இவ்வாணையத்தின் உறுப்பினர்—செயலராகச் செயல்படுவார்.

மேற்கூறிய பள்ளி மாணவர்கள் மருத்துவப் படிப்புகளில் குறைந்த அளவிலேயே சேர்வதற்கான காரணங்களை ஆராய்ந்து, அவர்களின் சமூகப் பொருளாதார நிலையினை மதிப்பீடு செய்து, இந்நிலையை சரி செய்ய, மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு எடுக்க வேண்டிய நடவடிக்கைகளை இந்த ஆணையம் அரசுக்குப் பரிந்துரை செய்யும். தனது பரிந்துரையை ஒரு மாத காலத்திற்குள் இவ்வாணையம் அரசுக்கு சமர்ப்பிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

## 5. கவன ஈர்ப்பு

### (அ) துறைமுகம் தொகுதி, பி.ஆர்.என். கார்டன், கிளைவ் பேட்டரி மற்றும் எல்லீஸ்புரம் குடிசைப்பகுதி மாற்று வாரியக் குடியிருப்புகளை பழுதுபார்த்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.கே. சேகர்பாபு அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருவார். மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.கே. சேகர்பாபு அவர்கள்.

2020 மார்ச் 21]

**திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "துறைமுகம் தொகுதியிலுள்ள பி.ஆர்.என். கார்டன், கிளைவ் பேட்டரி மற்றும் எல்லீஸ்புரம் வாரியக் குடியிருப்புகளை இடித்துவிட்டு, புதியதாக கட்டித் தருவது குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விரிவான விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**அறிக்கை**

**பி.ஆர்.என். கார்டன் திட்டப் பகுதி (96 குடியிருப்புகள்)**

பி.ஆர்.என். கார்டன் திட்டப் பகுதி, சென்னை, துறைமுகம், ஸ்டான்லி மருத்துவக் கல்லூரியின் அருகில் அமைந்துள்ளது. இத்திட்டப் பகுதியில் தலா 230 சதுர அடி பரப்பளவில் தரைத்தளம் மற்றும் 4 தளங்களாக 96 அடுக்குமாடிக் குடியிருப்புகள் 1990 ஆம் ஆண்டு குடியிருப்புதாரர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டன. தமிழ்நாடு குடிசை மாற்று வாரிய தொழில்நுட்ப வல்லுநர் குழு இத்திட்டப் பகுதியில் ஏப்ரல் 2018–ல் தல ஆய்வு மேற்கொண்டதில், குடியிருப்புகள் குடியிருக்க உகந்ததாக உள்ளதாகச் சான்றளித்துள்ளது. எனவே, தற்போது மறுகட்டுமானம் செய்ய அவசியமில்லை என்று அதிகாரிகளால் பரிந்துரைக்கப்பட்டது.

மேலும், பி.ஆர்.என். கார்டன் திட்டப் பகுதியில் பழுதுபார்த்தல் பணிக்காக ரூ.2.36 இலட்சத்திற்கான ஒப்பந்தங்கள் வழங்கப்பட்டு, தற்பொழுது மேற்கூரை பூசுதல், கழிவுநீரகற்று தொட்டிகள் பூச்சுவேலை, கைப்பிடிச் சுவர் மற்றும் படிக்கட்டுகளுக்கான பழுதுபார்ப்புப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

**கிளைவ் பேட்டரி–துறைமுகம் திட்டப் பகுதி (234 குடியிருப்புகள்)**

கிளைவ் பேட்டரி–துறைமுகம் திட்டப் பகுதி, சென்னை மாவட்ட ஆட்சியர் அலுவலகம் அருகில் அமைந்துள்ளது. இத்திட்டப் பகுதியில் தலா 246 சதுர அடி பரப்பளவில் தரைத்தளம் மற்றும் 2 தளங்களாக 6 தொகுப்புகளில் 234 அடுக்குமாடிக் குடியிருப்புகள் 1996 ஆம் ஆண்டு

குடியிருப்புதாரர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டன. தமிழ்நாடு குடிசை மாற்று வாரிய தொழில்நுட்ப வல்லுநர் குழு இத்திட்டப் பகுதியை ஏப்ரல் 2018–ல் தல ஆய்வு மேற்கொண்டதில், குடியிருப்புகள் குடியிருக்க உகந்ததாக உள்ளது என சான்றளித்துள்ளது. எனவே, தற்போது மறுகட்டுமானம் செய்ய அவசியமில்லை என்று அதிகாரிகளால் பரிந்துரைக்கப்பட்டது.

**எல்லீஸ்புரம் திட்டப் பகுதி:**

எல்லீஸ்புரம் திட்டப் பகுதி, சென்னை அண்ணா சாலையில் அமைந்துள்ள அண்ணா சிலைக்கு அருகில் அமைந்துள்ளது. இத்திட்டப் பகுதியில் தலா 384 சதுர அடி பரப்பளவில் 39 குடியிருப்புகளில், குடியிருப்புகள் ஒவ்வொன்றும் தரைத்தளம் மற்றும் 2 தளங்களாக 3 தொகுப்புகளில் கட்டப்பட்டு, குடியிருப்புதாரர்களுக்கு 1975 ஆம் ஆண்டு ஒதுக்கீடு செய்யப்பட்டன. மேலும், இதே திட்டப் பகுதியில் 32 குடியிருப்புகள் தலா 384 சதுர அடியில் தரைத்தளம் மற்றும் 3 தளங்களாக ஒரே தொகுப்பில் கட்டப்பட்டு, குடியிருப்புதாரர்களுக்கு 2001 ஆம் ஆண்டு ஒதுக்கீடு செய்யப்பட்டன.

2016–2017 ஆம் ஆண்டில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி உதவியுடன் ரூ.25 இலட்சம் செலவில் மேல்தளத்தில் தரைஓடுபதிக்கப்பட்டுபழுதுபார்ப்புப்பணிகள்மேற்கொள்ளப்பட்டன. மேல்தளத்தில் குடிநீர்த் தொட்டிகள் (Sintex tank) அமைத்து மின் மோட்டார்மூலம் குடியிருப்புதாரர்களுக்கு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

மேலும், 2018–2019 ஆம் ஆண்டில் மாநில அரசின் நிதியின்மூலம் ரூ.2.92 இலட்சம் செலவில் சாளரவிதானம் (Sunshade) பழுதுபார்க்கும் பணி, தரை பழுதுபார்க்கும் பணி, கழிவுநீர் கோப்பைகள் மாற்றி அமைத்தல் மற்றும் கழிவுநீர்க் குழாய்கள் அமைத்தல் போன்ற பழுதுபார்ப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

1972–1974 ஆம் ஆண்டில் கட்டப்பட்ட 39 குடியிருப்புகள் 40 ஆண்டுகளுக்கு மேல் பழமையான கட்டடம் என்பதால், தொழில்நுட்ப வல்லுநர் குழுவின் ஆய்விற்குப் பரிந்துரை செய்யப்பட உள்ளது. கட்டடத்தில் உறுதித்தன்மை குறித்த அறிக்கையின்படி, தொழில்நுட்ப வல்லுநர் குழுவிடம் மறுகட்டுமானம் செய்வது குறித்து பரிசீலிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.கே. சேகர்பாபு அவர்கள்.

2020 மார்ச் 21]

**திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையை முழுவதுமாகப் படித்துப் பார்த்தேன். அதில் கிளைவ் பேட்டரி மற்றும் பி.ஆர்.என். கார்டன் திட்டப் பகுதிகளில் தற்போது மறுகட்டுமானம் செய்ய அவசியமில்லை என்று ஆய்வறிக்கையில் தெரிவித்திருக்கிறீர்கள். எல்லீஸ்புரம் திட்டப் பகுதியில் மாத்திரம் 39 வீடுகளின் உறுதித்தன்மையை மீண்டும் ஆய்வு செய்து, மறுகட்டுமானம் செய்து தருவதற்கான நடவடிக்கை எடுப்பதாக கூறியிருக்கிறீர்கள். என்னுடைய கேள்வி என்னவென்றால், கடற்கரையை ஒட்டியுள்ள பி.ஆர்.என். கார்டன் மற்றும் கிளைவ் பேட்டரி பகுதிகளில் 25 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்ட குடியிருப்புகளில் Anti–corrosion steel என்பது பயன்படுத்தப்படவில்லை. அந்தக் காலத்தில் refined steel–ஐப் பயன்படுத்தியுள்ளார்கள். இது எளிதில் துருப்பிடிக்கின்ற சூழ்நிலையில் இருப்பதால், அடித்தளம் வலுவாக இருந்தாலும், மேலே இருக்கின்ற கூரைகள் அவ்வப்போது இடிந்து விழுகின்றன. சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து 10 இலட்சம் ரூபாயை ஒதுக்கீடு செய்து பழுதுபார்ப்புப் பணிகளைச் செய்து தந்திருக்கிறோம். இந்த ஓராண்டில் நான்கு முறை இந்தக் கட்டடங்களின் மேற்கூரைகள் இடிந்து விழுந்திருப்பதால் மாண்புமிகு துணை முதல்வர் அவர்கள் புதிய குடியிருப்புகள் கட்ட மறுபரிசீலனை செய்ய வேண்டும். 2018 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட ஆய்வினைத்தான் நீங்கள் குறிப்பிட்டிருக்கிறீர்கள். 2 ஆண்டுகள் முடிந்துவிட்டன. எனவே, தற்போது மீண்டும் புதிதாக ஒரு ஆய்வினை மேற்கொண்டு, புதிய வீடுகளைக் கட்டித் தருவதற்குண்டான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களிடம் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.

முற்பகல் 11–30

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர், நண்பர் திரு. சேகர்பாபு அவர்கள், அவர் சார்ந்திருக்கின்ற துறைமுகம் சட்டமன்றத் தொகுதியில் இருக்கின்ற 3 பகுதிகளில், குடிசைப் பகுதி மாற்று வாரியத்தால் கட்டப்பட்டுள்ள வீடுகளின் நிலையைப்பற்றி இங்கே எடுத்துக்கூறினார்கள். சென்னை, பி.ஆர்.என். கார்டன் திட்டப்

பகுதியில், வாரியத்தால் கட்டப்பட்டு பராமரிக்கப்பட்டுவரும் 96 அடுக்குமாடிக் குடியிருப்புகள் நல்ல பாதுகாப்பான நிலையில் உள்ளன என தொழில்நுட்பக் குழு பரிந்துரைத்துள்ளது. இக்குடியிருப்பின் சிறு சிறு பழுதுபார்ப்புப் பணிகள் அரசு நிதியுதவிடன் மேற்கொள்ளப்படுகின்றன. 2019–2020 ஆம் ஆண்டில் ரூ.2.36 இலட்சம் மதிப்பீட்டில் பழுதுபார்ப்புப் பணிகள், அதாவது, கைப்பிடிச் சுவர் மற்றும் படிக்கட்டு பழுதுகள் சரி செய்தல், மேற்கூரைப் பூச்சு பழுதுகள் சரி செய்தல், கூரைதளம் மற்றும் கழிவுநீர் அமைப்பைச் சரி செய்தல் என மொத்தம் ரூ.2.36 இலட்சம் செலவில் பராமரிப்புப் பணிகள் நடைபெற்றிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கிளைவ் பேட்டரி—துறைமுகம் திட்டப் பகுதியில், வாரியத்தால் பராமரிக்கப்பட்டுவரும் 234 அடுக்குமாடிக் குடியிருப்புகள் நல்ல பாதுகாப்பான நிலையில் உள்ளன என தொழில்நுட்பக் குழு பரிந்துரை செய்துள்ளது. 2018–2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளில், மேற்கூரை பூச்சுப் பழுதுகள் சரி செய்தல், மேற்கூரை தளத்தில் weathering course மற்றும் ஓடுகள் பதித்தல், பழுதடைந்த உள் தரை பழுதுகளை சரி செய்தல், கழிவுநீர் பீங்கான் மற்றும் கழிவுநீர் அமைப்பை சரி செய்தல் போன்ற பணிகளுக்காக ரூ.7.20 இலட்சம் செலவழிக்கப்பட்டு, பராமரிப்புப் பணிகள் சிறப்பாக நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சென்னை எல்லீஸ்புரம் திட்டப் பகுதியில் வாரியத்தால் பராமரிக்கப்பட்டுவரும் 71 அடுக்குமாடிக் குடியிருப்புகள் நல்ல நிலையில் உள்ளன. இவற்றில் 39 குடியிருப்புகள் 1972–1974 ஆம் ஆண்டுகளில் கட்டப்பட்டன. இக்குடியிருப்புகள் தொழில்நுட்பக் குழுவினரால் ஆய்வு செய்யப்படும்; தொழில்நுட்பக் குழு மறுகட்டுமானம் செய்ய பரிந்துரை செய்திருக்கின்றது. தேவைப்படுகின்ற நிதி ஆதாரத்தைப் பெற்று, மறுகட்டுமானப் பணிகள் மேற்கொள்ளப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். இந்தப் பகுதியிலும் ரூபாய் 2.92 இலட்சம் மதிப்பீட்டில் சிறு சிறு பழுதுபார்ப்புப் பணிகளும் நடைபெற்றிருக்கின்றன. அதாவது சாளரவிதானம் (sunshade) பழுதுகள் சரி செய்தல், பழுதடைந்த உள் தரைகளை சரி செய்தல்,

கழிவுநீர் அமைப்பினை சரி செய்தல் போன்ற பணிகள் எல்லாம் இந்தப் பகுதியில் நடைபெற்று வருகின்றன. தற்போது மாண்புமிகு உறுப்பினர் திரு. சேகர்பாபு அவர்கள் இந்த 3 பகுதிகளையும் மீண்டும் தொழில்நுட்பக் குழு ஆய்வு செய்ய வேண்டும் என்று இங்கே வலியுறுத்திக் கூறியிருக்கின்ற காரணத்தினால், மீண்டும் இந்த 3 பகுதிகளிலும் தொழில்நுட்ப வல்லுநர் குழு ஆய்வு செய்து, அந்த ஆய்வின் அடிப்படையில் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.கே. சேகர்பாபு அவர்கள்.

**திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கேட்டுக்கொண்ட அந்த 4 திட்டப் பகுதிகளில், கல்யாணபுரம் பகுதி என்பது மறுகட்டுமானத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. கடந்த ஆண்டே அங்கே இருந்தவர்கள் முழுமையாக அந்த இடங்களைக் காலி செய்து தந்தும்கூட, ஓராண்டு ஆகியும், இன்னும் அந்தப் பணியானது கல்யாணபுரம் பகுதியில் தொடங்கப்படாமல் உள்ளது. அங்கே அருகில் இருக்கின்ற குடியிருப்புவாசிகளின் விவரங்களையும் கடந்த 4–5 நாட்களாக எடுத்துக்கொண்டிருக்கின்றார்கள். அவர்கள், தாங்கள் எந்த நேரத்திலும் அப்புறப்படுத்தப்பட்டு பெரும்பாக்கத்திற்கு அனுப்பப்படுவோம் என்ற பீதியில் இருக்கின்றார்கள். இந்த நிலையில், அருகில் K.P. Park பக்கத்தில் கட்டப்பட்டிருக்கின்ற 1,050 குடியிருப்புகளில் கூடுதலாகக் கட்டப்பட்டுள்ள குடியிருப்புகளை அந்தப் பகுதியில் வாழ்கின்ற மக்களுக்கு ஒதுக்கித் தந்து, அவர்கள் வாழ்வில் ஒளியேற்றுங்கள் என்று கேட்டு, பட்டுக்கோட்டையார் அவர்களின் பாடல் வரிகளை நினைவுபடுத்த விரும்புகிறேன்.

> "மழை பொழிவது தெரியவில்லை மாளிகை வாசலிலே;
> அது வரும் முன்னே தெரிந்துவிடும் ஏழை குடிசையிலே"

என்று ஒரு திரைப்படத்தில் பட்டுக்கோட்டையார் அவர்கள் பாடியிருக்கின்றார். ஆனால், இப்போது மழை முழுவதும் குடிசைக்குள் பெய்கின்ற நிலையில்தான் அந்த கல்யாணபுரம் பகுதியில் வசிப்பவர்கள் இருக்கின்றார்கள். எனவே, அவர்களுக்கு மாற்று இடத்தைத் தந்து, அவர்களின் வாழ்வு சீராவதற்கு உதவிடுமாறு, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக, மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களைக் கேட்டு அமர்கின்றேன்.

[2020 மார்ச் 21

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், குடிசைப் பகுதிகளற்ற மாநிலமாக தமிழ்நாடு உருவாக்கப்படும் என்று "தொலைநோக்குத் திட்டம் 2023"–ல் பிரகடனம் செய்து, அதை நாட்டு மக்களுக்கு அறிமுகப்படுத்தினார்கள். அந்த அடிப்படையில், சென்னை மாநகரம் உட்பட தமிழகத்தில் இருக்கின்ற பேரூராட்சிகள், நகராட்சிகள், மாநகராட்சிப் பகுதிகளில் உள்ள குடிசைப் பகுதிகளில் வாழ்கின்ற ஏழையெளிய மக்களுக்கு உறுதியான, தரமான கான்கிரீட் வீடுகள் கட்டிக் கொடுக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது. அதன்படி, சென்னை மாநகரத்தைப் பொறுத்தவரையில், கணக்கெடுப்பு நடத்தப்பட்டிருக்கின்றது. சென்னை மாநகராட்சியினுடைய ஆணையாளருடைய பரிந்துரையின்பேரில், அவர்கள் எங்களுக்குப் பட்டியல் தருகின்றார்கள்.

முற்பகல் 11–35

அந்தப் பட்டியலின் அடிப்படையில், மறு குடியமர்வு செய்கின்ற பணி நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது. அந்த மறு குடியமர்வு சீரமைப்புப் பணிகளைத்தான் நம்முடைய குடிசைப் பகுதி மாற்று வாரியத்தின் மூலமாக நாங்கள் செய்து வருகிறோம். சென்னை மாநகராட்சி தருகின்ற பட்டியலின்படி நாங்கள் உரியவர்களுக்கு உரிய வீட்டினை ஒதுக்கி, பல்வேறு திட்டப் பகுதிகளில், குடிசைப் பகுதி மாற்று வாரியத்தின் மூலமாகக் கட்டப்பட்டிருக்கின்ற அந்த உறுதியான கட்டடங்களில், நாங்கள் அவர்களை குடியமர்வு செய்கின்ற பணியை மேற்கொண்டிருக்கிறோம். அந்த வகையில், மாண்புமிகு உறுப்பினர் திரு. சேகர்பாபு அவர்கள் சொல்கிற அந்தப் பணிகளும் விரைவாகச் செய்து முடிக்கப்படும். கல்யாணபுரம் திட்டப் பகுதியில் வீடுகள் எல்லாம் கட்டி முடிக்கப்பட்டிருக்கின்றன. அதேபோன்று, மிகையாகக் கட்டப்பட்டிருக்கிற குடியிருப்புகளை அங்கே அருகில் இருக்கின்ற குடியிருப்புவாசிகளுக்கு ஒதுக்கிட வேண்டும் என்ற ஒரு கோரிக்கையையும் இங்கே வைத்திருக்கின்றார்கள். மாநகராட்சி அளிக்கும் பட்டியலில் அவர்கள் சேர்க்கப்படுவார்களேயானால், உரிய தகுதி இருப்பின், அவர்களுக்கு வீடுகள் ஒதுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.